# கமுனுவின் காதலி!

மு. கனகராசன்

94.811,
2
...AN

ஒரு மதுரம் நூல்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ශ්‍රී ලංකා විශ්ව විද්‍යාලය
පුස්තකාලය
1975 ජුලි - 3
පේරාදෙණිය.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ශ්‍රී ලංකා විශ්ව විද්‍යාලය
පුස්තකාලය
1975 ජූලි - 3
පේරාදෙණිය.

310433

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கமுனுவின் காதலி

ஒரு

சரித்திர

ஓரங்க

நாடகம்

மு. கனகராசன்

310433

மதுர நிலையம்

மானிப்பாய்

யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'Gamunuvin Kaathaly'

(A CEYLON HISTORICAL PLAY)

*by*

M. Kanagarasan

MADURAM : 1
FIRST EDITION : Jan. 1970
PUBLISHERS : Mathura Nilayam
Manipay
Jaffna
PRINTERS : Shakthy Press
Mulliyawalai
Ceylon

THOSE WHO WISH TO STAGE THIS PLAY MUST GET WRITTEN PERMISSION FROM THE AUTHOR.

PRICE: 1|-

---

COPYRIGHT:
M. KANAGARASAN
HOSPITAL LANE
MANIPAY (JAFFNA)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1975

# மதுர உதயம்

ஏமது இலக்கியப் பிரயாணத்தில் இப்போது சிறப்பானதோர் விழிப்புநிலை ஏற்பட்டிருக்கின்றது. நாடெங்கும் கவியரங்கங்களும், சொற்பொழிவுகளும், நாடகங்களும் ஒழுங்குசெய்யப்படுகின்றன. இலக்கியப் பிரியர்கள் 'ஈழ இலக்கியம்' எனக் கேட்டு வாங்குகிறார்கள். எனவே தரமான படைப்புகளை அவர்களுக்களிப்பது எமது கடமையாகிறது.

ஈழத்து நூல்களுக்கு மலேசியாவில் நல்ல வரவேற்பிருக்கிறது. பொதுவாகவே ஈழ இலக்கிய எழுச்சியில் வங்கத்து வீறும், கேரளத்து வீச்சும் இருப்பதாகத் தமிழக எழுத்தாளர்களே கணிக்கத் தொடங்கிவிட்டார்கள்.

இப்படியானதோர் மகத்தான வேளையிலேயே மதுரம் உதயஞ் செய்கிறது. இந் நந்நிமித்தத்தில் நாமும் நமது நாடும் பெருமைப் படத்தக்க ஆக்கங்களையே நாநிலத்துக் களிப்போமெனப் பிரதிக்ஞை பண்ணுவோம்!

'கமுனுவின் காதலி' 'மதுர'த்தின் முதலாவது வெளியீடு. தொடர்ந்து மாதம் ஒரு நூல் வெளியிடப்படும். இலக்கியவாதிகள் அனைவரின் படைப்புகளுமே 'மதுரம்' முத்திரையுடன் பிரசுரமாக வேண்டும் என்பதே எமது வேணவா!

இத்தார்மிக நல்லெண்ணங்கள் பலன்தர எழுத்தாளர்களோடு கலைஞர்களும், வாசகர்களும் பேருதவி புரிதல் வேண்டும். எனவே, நமது நூல்களை விலைகொடுத்து வாங்குவதோடு உறவினர்கள், நண்பர்கள், அறிந்தவர்கள் அத்தனை பேர்களுக்குமே மீண்டும் மீண்டும் சொல்லிச் சொல்லி அறிமுகப் படுத்த வேண்டுகிறோம். இதை ஒரு சேவையாகவே செய்வீர்களென நம்புகின்றோம்.

•

**பதிப்பகத்தார்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதிப்புரை

நாடகக்கலை தமிழரின் ஆதிக்கலைகளில் ஒன்று; ஆய கலைகள் அறுபத்துநான்கினுள் மிகவும் முக்கியம் வாய்ந்தது. அத்துணை அரும்பெரும் கலையில் ஊறித்திளைத்த பரம்பரையில் வந்த ஈழத்தமிழர் நாடகக் கலையில் நெடுங்காலம் தாழ்வுற்றுக் கிடந்துவிட்டனர். அக்காலத்திலும் நாடகம் ஆடப்படாமலில்லை. சிறந்த நடிகர்களும், அண்ணாவிமார்களும் இல்லை என்று சொல்வதற்குமில்லை. நாடகக் கலைஞர்கள் போற்றப்படவில்லை. நாடகக் கலையின் அறிவியல் புகட்டப்படவில்லை. ஆர்வ மேலீட்டினால் ஆங்காங்குள்ள கலைஞர்கள் தனிப்பட்ட முயற்சிகளினால் நாடகக் கலையை நடாத்திச் சென்றனர்.

இவ்வித நிலைமை இப்பொழுதில்லை. நாடகக் கலையின் உயர்வு உணரப்படுகின்றது. நாடகக் கலைஞர்களின் பெருமை பேசப்படுகின்றது. நாடகத்தை வளர்க்க வேண்டுமென்ற எண்ணம் பரவி வருகின்றது. அதற்குவேண்டிய முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. வானொலி நிலையம், கலைக் கழகம், பத்திரிகைகள், தனிப்பட்ட சில மன்றங்கள் முதலியனவற்றின் பெருமுழைப்பால் நாடகத் தமிழ் நன்கு வளர்ந்துவருகின்றது.

பழைய தமிழ் நாடக மரபுகள் பேணப்படும் அதேவேளையில் புதிய முறைகளும் புகுத்தப்பட்டு வருகின்றன. புதிய முறைகளில் மேலைநாட்டு ஓரங்க நாடகங்கள் நன்கு வேரூன்றத் தொடங்கிவிட்டன.

ஓரங்க நாடகங்கள் ஒரே களம் - ஒரே காட்சி என்றும், ஒரே களம் - ஐந்து அல்லது ஆறு சிறு காட்சிகள் என்றும் இரு வகையாக அமைக்கப்படு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றன. ஒரே களத்தில் ஒரே காட்சியாக அமைக்கும் முறையே சிறந்தது என்பது வல்லாளர் கருத்து.

இச் சிறந்த முறையைப் பின்பற்றியே 'கமுனுவின் காதலி'யை நண்பர் மு. கனகராசன் அவர்கள் எழுதியிருக்கின்றார்கள். நண்பர் மு. க. யாழ். இலக்கிய வட்டத்தின் முக்கிய செயற்குழு அங்கத்தவர்; பரிசில் பல பெற்ற இலக்கிய ஆசிரியர். அவரின் இவ் வரலாற்று ஓரங்க நாடகம் பல சிறப்பியல்புகளால் உயர்ந்து விளங்குகின்றது.

நாடகவாசிரியரது உயர்ந்த நோக்கம் வரலாற்றிற் புதுமை செய்கின்றது. அதுவே உண்மையுமாகும் என்பதனை நாடகம் வலியுறுத்திச் செல்கின்றது. உண்மையோ இல்லையோ, 'ஈழத்தின் இரு கண்களான தமிழரையும், சிங்களவரையும் நான் என்றுமே பேதப்படுத்தியதில்லை; பேதப்படுத்தவும் மாட்டேன். இது சத்தியம்!' என்று முழங்கும் கமுனு இன்றைய நிலையில் மிகவும் வேண்டப்படுகின்றான் என்பது மட்டும் உண்மை.

கமுனு வாயிலாகவும், மற்றைய பாத்திரங்களைக் கொண்டும் கமுனுவின் வீரமும், உயர்ந்த கொள்கைகளும் படிப்படியாக நன்கு சித்தரிக்கப்படுகின்றன. இராஜகுரு, தளபதி வீரசிம்மன், வேந்தன் எல்லாளன் ஆகிய பாத்திரங்கள் பதவியால் வேறுபடுமளவுக்குப் பான்மையால் வேறுபடவில்லை. இராஜகுருவின் வசனங்கள் ஒரு வீரனுக்குரியதைப் போலிருப்பினும் மேடையில் நடிப்பவரின் ஆற்றலால் சாந்தங்கொண்டு திகழக் கூடியதாகவே அமைக்கப்பட்டிருக்கின்றன.

வசனங்கள் எடுத்துப் பேசவல்ல இயல்பான வசனங்கள். கனத்த கலைத்துவ வசனங்கள் பல இடங்களில் காதுக்கும், கருத்துக்கும் இன்பமூட்டுகின்றன. எடுத்துக்காட்டுக்குச் சில:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தண்ணீர் பள்ளத்திலே இருப்பதனுல் மட்டும் தரம் குறைவதில்லை கமுனு'

'கட்டுண்ட சிங்கத்தின்மீது சுண்டெலி ஓடி விளையாடுவதை எங்கள் ரொகுனுரதாவில் வீரமாகக் கொள்வதில்லை.'

'...உன் தந்தை பாறையில் மோதிப் பானையை உடைக்க விரும்பவில்லை'

'...விதையைத் தலைகுப்புற நட்டாலும் அது பூமிக்கு மேலேதான் தன் தளிரை விடும்.'

இவை நண்பர் கனகராசனின் கற்பனை வளத்தையும், சொற்பொருள் நயத்தையும் எடுத்துக் காட்டுகின்றன.

'கமுனுவின் காதலி' ஓர் இலகு நாடகம். இலகு நாடகம் என்பது அளவான பாத்திரங்களுடன், குறைந்த செலவில், குறுகிய அறிவித்தலோடு எவ்விடங்களிலும் மேடையேறி வெற்றிபெறவல்ல நாடகமாகும். 'கமுனுவின் காதலி'யைக் குறைந்த செலவில் ஆர்வமுள்ள தயாரிப்பாளர்கள் யாரும் மேடையேற்றலாம்' தூர இடங்களுக்கும் கைவீசிச் சென்று நடித்துக் காட்டலாம்.

இவ்விதம் இலகுவாக மேடையேற்றக் கூடிய இதன் தன்மையும், இரு பெரும் சமூகங்களுக்கிடையே ஒற்றுமையை நிலைநாட்ட முயலும் உயர்ந்த நோக்கமும், கருத்துக்கினிய கற்பனை நயம் வாய்ந்த வசனங்களும் இந்த ஓரங்க நாடகத்தை என்றும் வாழவைக்கும் என்பது உறுதி!

**வி. கந்தவனம்**

குரும்பசிட்டி, (தலைவர், யா. இ. வட்டம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சில
## வார்த்தைகள்

உரோம சாம்ராஜ்யத்தின் சீசரைப்போல, கிரேக்க சாம்ராஜ்யத்தின் அலெக்சாண்டரைப் போல, மௌரிய சாம்ராஜ்யத்தின் ஔரங்கசீப் போல, பாண்டிய சாம்ராஜ்யத்தின் நெடுஞ்செழியனைப்போல ஈழத்திலே தோன்றியவன்தான் கமுனு என்று சிங்களச் சகோதரர்கள் போற்றுகின்றார்கள்.

அப்படியான ஒரு வீரனைத் துட்டன் என்றும், தமிழர்களின் எதிரி என்றும் இன்று பிரச்சாரப் படுத்துவது சரித்திரத்தையும், அவனையுமே அவமானப்படுத்துவதாகும்.

கமுனு சிறந்த பக்திமான். கதிர்காமத்தில் தமிழ்க்கடவுள் முருகனுக்குக் கோவிலெடுத்து, பௌத்தர்களிடையே முருக வழிபாட்டை ஏற்படுத்தியவனே கமுனுதான். தமிழ் மக்களின் வேண்டுகோளுக்கிணங்க ஆலயங்களைச் செப்பனிட்டுள்ளான். சைவத்துக்குப் பெரிதும் உதவியிருக்கிறான். கதிர்காமத்துக்கு ஏராளமான நிலங்களை மானியமாக வழங்கியுள்ளான். குளங்களையும், டகோபாக்களையும் கட்டுவித்திருக்கின்றான்.

கமுனுவின் ஆட்சியில் ஈழத்து அரசியலில் ஒரு புதிய சகாப்தமே உருவாயிற்று. (இன்றைய அரசியல் திருப்பு முனையிலும் அவனது பெயரே முத்திரையாகப் பயன்படுத்தப்படுகிறது.) அவனுக்குப் பின்னரோ அவனது ஆட்சிச் சிறப்பையிட்டுத் தமிழரும், சிங்களவரும் பெருமையுடனேயே பேசி வந்துள்ளனர். தமிழர் கமுனுவின் ஆட்சியை வெறுக்கவில்லை என்பதற்கும், கமுனு தமிழரை ஆதரித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் என்பதற்கும் வரலாற்றில் சான்றுகள் ஏராள மிருக்கின்றன. மகாவம்சமும் இதையே கூறுகின்றது.

உண்மையில் கமுனு தமிழர்களை வெறுக்கவுமில்லை, விரட்ட எண்ணவுமில்லை; ஈழத்தை ஆக்கிரமித்த பிறநாட்டு மன்னர்களைத்தான் எதிர்த்தான்.

சோழ வம்சத்து எல்லாளனும், ஈழத்தை ஆண்ட எல்லாளனும் வெவ்வேறானவர்கள் என்பதே உண்மை. சோழப் பேரரசைக் கட்டிக்காத்த அந்த (எல்லாள) மன்னனின் சரித்திரமும், ஈழத்தைக் கைப்பற்றியதாகச் சொல்லப்படும் எல்லாளனின் சரித்திரமும் மிகவும் முரண்படுகின்றன.

ராஜப் பரம்பரையினிடத்தில் செல்வாக்குக் கொண்ட எல்லாளன் என்ற கடல் வாணிகனே சிதைந்த ஈழத்தைக் கைப்பற்றினன் என்பது சில ஆராய்ச்சியாளர்களின் சமீபகால முடிவாகும்.

அந்நாளைய ஈழம் மிகப் பிரபலமான ராஜரதா, மலையரதா, ரொகுனுரதா என்ற முப்பெரும் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவற்றிற்கு முறையே அனுரதபுரம், கல்யாணி (களனி), மஹாகமை (தென்னிலங்கை) என்பன தலைநகரங்களாக விளங்கின.

இம் முப்பகுதிகளையும் மாறி மாறித் தமிழரும், சிங்களவரும் ஆட்சி புரிந்திருக்கின்றனர்.

கமுனு ராஜரதாவுக்கு வடக்கே இருந்த நல்லூர், மாதோட்ட தமிழ் ராஜதானிகளை என்றுமே பகைத்தது கிடையாது. அவனுக்குத் தமிழரும், சிங்களவரும் ஈழத்தின் இரு விழிகளாகவே இருந்திருக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியான வரலாற்றுச் சான்றுகளைப் பகைப் புலமாகக் கொண்டே எல்லாளனுடைய தளபதியின் மகள் சித்ரவல்லி கமுனுவைக் காதலித்தாள் என்ற கற்பனையுடன் இந் நாடகத்தைப் புனைந்துள்ளேன்.

இதை ஒரு சரித்திர 'நாவலாகப் புனைய நீண்ட நாட்களாகவே என் இதயம் கனன்றுகொண்டிருக் கிறது. இப்போது சுருக்கமாக - ஒரு ஓரங்க நாடக மாய் - அத்துடன் ஒரே காட்சியிற் படைக்கின் றேன். நான் எழுதிய முதலாவது ஓரங்க நாடக மும் இதுதான்.

இனிய நண்பரான கவிஞர் வி. கந்தவனம் B. A. அவர்கள் மதிப்புரை வழங்கினார்கள். அவருக்கு என் நன்றி.

புதிய நூல்கள் பெருகவேண்டும் என்ற சீரிய நோக்கத்தோடு, இந்நூல் வெளிவர மலர்ந்த முகத் துடன் ஒத்துழைத்த 'சக்தி அச்சக' உரிமையாளர் 'வெற்றிமணி' மு. க. சுப்பிரமணியம் அவர்களுக்கு என்றும் கடமைப்பட்டுள்ளேன்.

என் எழுத்துக்கு அன்பும், ஆதரவும் நல்கி, தமிழன்னையின் மலர்த் தட்டத்தில் நானும் என் சக்திக்குட்பட்டவரை சிறிய, ஆனால் வாசமுள்ள மலர்களை வைக்கிறேனென நீங்களனைவரும் எண்ணி னால் அதுவே எனக்கு மகிழ்ச்சி தருவதாகும்!

**மு. கனகராசன்**

ஆஸ்பத்திரி ஒழுங்கை,
மானிப்பாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணிக்கை

என் சின்னவயதி லொரு
ஆசானை அழைப்பித் தெனக்குப்
பூணூலிட்டுச் சரஸ்வதியைப்
பூஜித்துத் தமிழ் வேதம் ஓதிக்
கல்வியை ஆரம்பித் தென்
இதயத்தில் என்றும் வாழும்
**தாத்தா**
அமரர்
**முருகண்டி பிச்சமுத்து**
அவர்களின்
பாத கமலங்களுக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1975 ஜுலை -3

# கமுனுவின் காதலி

வீரன் கமுனு தன் படையுடன் ராஜரதாவின் எல்லையில் பாசறையிட்டான். படையை விட்டுவிட்டுத் தான் மட்டும் சமரசப் பேச்சுவார்த்தைகளுக்காக எல்லாளனின் கொலு மண்டபத்திற்கு வந்தான். எல்லாளன் கமுனுவைத் தனக்குட்பட்ட இளவரசனாக இருக்கச் சொன்னான். ஆனால் கமுனு தனக்கும் அரியாசனத்தருகே சரியாசனம்தான் வேண்டும் என்றான். எல்லாளனே கமுனுவைச் சிறைப்படுத்தினான். இதிலிருந்து காட்சி தொடங்குகிறது.

இடம் : சிறைக் கூடம்

காலம் : பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட கவந்தீசன் என்ற காகவர்ண தீசனின் காலம்.

நேரம்: மாலை.

பாத்திரங்கள்: கமுனு, எல்லாளன், எல்லாளனின் ராஜகுரு, தளபதி வீரசிம்மர், சித்ரவல்லி, காவலர்கள்.

திரை விலகுகிறது. பெரிய கதவுகளின் இரும்புக் கம்பிகளுக்கூடாகச் சிறை அறை தெரிகிறது. உள்ளே ஆஜானுபாகுவான தோற்றத்துடன் ஒரு இளைஞன் உலவிக்கொண்டிருக்கின்றான். அந்த நடையிலும், சிறைக்குள்ளே கூட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனிடமுள்ள கம்பீரத்திலும் அவனுடைய ராஜரீகம் துலாம்பரமாகத் தெரிகிறது. கதவுகளின் இரு புறமும் காவலாக இரண்டு முரடர்கள் ஈட்டிகளுடன் நிற்கிறார்கள். அவர்களுக்கு வலது புறமாகப் படிகள் தென்படுகின்றன. அந்தப் படிகளில் யாரோ இறங்கி வருகிறார் என்பதற் கடையாளமாக 'டக் டக்' என்ற சப்தம் கேட்கிறது. காவலாளிகள் மிடுக்குடன் கம்பீரமாகிக் கொள்கின்றனர். சிறைக்குள்ளேயிருக்கும் வீரனோ அதைப் பொருட்படுத்தாதவனைப் போலத் தன் போக்கில் ஆழ்ந்த சிந்தனையுடன் உலவிக்கொண்டிருக்கிறான்.

வருவது எல்லாளனின் ராஜகுரு. நெடிய கம்பீரமான உருவம். அவரணிந்திருக்கும் நீண்ட பொன்நிற அங்கி அவரின் அந்தஸ்தைக் காட்டுகிறது. கண்களின் ஒளிப் பிரவாகம் 'யாரையும் வீழ்த்தவல்லேன்' எனக் கட்டியம் கூறுகிறது. அவர் படிகளில் இறங்கிச் சிறைக்கூடத்துக்கு முன்னால் வந்தவுடன் காவலாளிகள் குனிந்து மரியாதை செய்கின்றனர். அவர் சிறைக்கம்பிகளுக்கு முன்னால் நிற்கிறார்.

ராஜகுரு : ரொகுனுரதாவின் இளவரசருக்கு என் வணக்கம்!

கமுனு : ஆச்சரியம்! மிக மிக ஆச்சரியம்! வேற்று நாட்டு ராஜகுருவின் வணக்கம். ஒரு கைதிக்கு இத்தனை மரியாதையா? அதுவும் சிறைக்கூடத்துக்குள்ளேயே...

ராஜ : தவறாக நினைக்கிறீர்கள். தாங்கள் கைதியல்ல! எங்கள் நிபந்தனைகளுக்குச் சம்மதிப்பதற்காக அவகாசம் தந்திருக்கின்றோம்.

கமுனு : ஹஹ்ஹ... ஹஹ்ஹ... ஹஹ்ஹ... ஹா! அதாவது ஈழத்து முதலாவது மன்னன் அசோக வனத்தில் சீதைக்குத் தந்ததைப்போல... அப்படித்தானே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜ : சரியாகச் சொன்னீர்கள். அவள் பெண். கேவலம் அவளுக்குப் பூங்காதான் ஏற்றது; ஒரு வீரனுக்கு —அதுவும் ஒரு இளவரசனுக்கு உகந்த இடத்தையல்லவா தரவேண்டும்....

கமுனு : எனக்குத் தகுந்த இடம்? கமுனுவுக்குத் தகுந்த இடம் எல்லாளனுக்குக் கீழே ஒரு சிற்றரசனுக்குத் தரப்படுவதல்ல - ராஜகுருவே! அது எல்லாளனின் அரியாசனத்துக்குச் சரியாசனம்... தெரியுமா உங்களுக்கு?

ராஜ : தண்ணீர் பள்ளத்திலே இருப்பதனால் மட்டும் தரம் குறைவதில்லை கமுனு.

கமுனு : எல்லாளனின் ராஜகுரு அரசியற் சாணக்கியத்தில் தான் கெட்டிக்காரர் எனக் கேள்விப்பட்டிருக்கிறேன். சொல் ஜாலத்திலும் அவர் அப்படித்தான் என இப்போதுதான் தெரிகிறது.

ராஜ : எங்கள் வீரமும், திறமையும் நிகரற்றவை. அது தெரியாமல்தான் ''சிலர்'' அவஸ்தைப் படுவதுண்டு.

கமுனு : (தன்னைத்தான் குத்திக்காட்டுகிறார் என்றறிந்து) கட்டுண்ட சிங்கத்தின்மீது சுண்டெலி ஓடி விளையாடுவதை எங்கள் ரொகுனுரதாவில் வீரமாகக் கொள்வதில்லை.

ராஜ : (கோபத்துடன்) இந்த ராஜகுருவுடன் இத்தனைத் துணிச்சலாகப் பேசிவிட்டு இன்னமும் உயிரோடு இருப்பது கமுனு மட்டுந்தான்.

கமுனு : (ஏளனமாக) அப்படியா?... சுத்த வீரனையே நீங்கள் சந்தித்ததில்லைப் போலிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜ : கமுனு! உன்னை இளவரசனுக்குரிய மரியாதையுடன் நடத்தவேண்டும் என்ற மன்னரின் நல்லெண்ணத்தைப் பயன்படுத்திக்கொண்டு வீண் பேச்சில் விவேகத்தை இழக்காதே.

கமுனு : மரியாதை!... விவேகம்! இவை ரொகுனு வீரனுக்குச் சொல்லித் தெரியவேண்டியதில்லை.

ராஜ : ரொம்பச் சரி! விவேகத்தைச் சரியான முறையில் நீ பயன்படுத்தவேண்டும் என்பதுதான் எங்கள் விருப்பமும்...! மன்னரின் விருப்பப்படி நடந்தால் உன்னை எவருமே எதுவுமே செய்ய முடியாது.

கமுனு : உங்கள் எல்லாளரின் ஆசைக்கு என் அநுதாபங்கள். ஆனல், எல்லாளரிடம் சொல்லுங்கள் உங்களின் விருப்பத்துக்காக நான் இயங்குவதானல் அதற்குப் பெயர் 'விவேகம்' அல்ல அது பேடித்தனம் என்று.

ராஜ : (சலிப்புடன்) விகாரமாதேவி உன்னைச் சொல்லாடலிலும் வல்லவனுகத்தான் ஆக்கியிருக்கிருள்.

கமுனு : ஆமாம்! தாயிற் சிறந்த கோவிலில்லையல்லவா?

ராஜ : ஆனல் தந்தை சொல்மிக்க மந்திரமில்லை என்பதை ஏன் மறுக்கிருய்? உன் தந்தை கவந்திசர் எங்களுடன் சமாதானமாக வாழவேண்டும் என்று விழைவது ஏன் தெரியுமா?

கமுனு : நன்ருகத் தெரியும்! அதனுற்தானே அவருக்குப் பெண்களின் சேலையும் கங்கணமும் அனுப்பி வைத்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜ : கமுனு! ஆத்திரம் அறிவின் விரோதி. உன் தந்தை பாறையில் மோதிப் பானையை உடைக்க விரும்பவில்லை.

கமுனு : பாறை....! பானை....! யாரிடம் பேசுகிறீர் இவ் வார்த்தைகளை....? என் ஆத்திரத்தைக் கிளற வேண்டாம்.

[சொல்லிவிட்டுக் கமுனு சிறைக் கம்பி களைப் பிடித்து ஆக்கிரோசத்தோடு அசைக்கிறுன்.]

ராஜ : கமுனு! நீ ஒரு இளவரசன். பளிங்கு மாளிகை யிற் பல நூறு மங்கையருடன் குதூகலிக்க வேண்டியவன். சரி என்று சொல் இப்போதே... ராஜரதா முழுவதும் ரதத்தில் பவனி வரலாம். சொல்! சரி என்று சொல்!

[கமுனு பேசாமல் நிற்கின்றுன்.]

ராஜ : (அவன் மனம் மாறுவதாக எண்ணி) கமுனு! உலகின் சுந்தரத்தை, யௌவனத்தை, எழிலை யெல்லாம் நீ ஏன் இழக்கவேண்டும்? உன் ஒரு தலையசைப்பைத் தந்தால் செங்கரும்பு மொழி யாரின் பொங்கிவரும் பேரெழிலை யெல்லாம் – தந்தத்தின் செழிப்பொத்த தளிர்மேனித் துடிப்புக்களையெல்லாம் – சிங்கார மாளிகையில் சப்ரகூட மஞ்சத்தில் சந்திக்கலாமே கமுனு!

கமுனு : நான் என்ன செய்யவேண்டும்? ஒரு குறுநில மன்னனுக இருக்கவேண்டும். எல்லாளன் சாம் ராஜ்யத்தில் நானும் ஒரு அரசன். அவ்வளவு தானே...?

ராஜ : (பூரிப்புடன்) ஆமாம் இளவரசே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமுனு : (ஏளனமாக) கள்ளையும், கன்னியரையும் காட்டித்தானே பல மாவீரர்களைக் கவர்ந்தீர்கள்.

ராஜ : கமுனு!

கமுனு : ஆனால் நான்...! குருஜீ! எல்லாளனின் ரத்தம் தோய்ந்த கட்டாரியைக் கழுவிய தடாகத்தில் ஸ்நானம் செய்வதாக எந்த மகாராணி கனவு கண்டாளோ, அந்த விகாரமகாதேவியின் மைந்தன் நான் என்பதை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள்.

ராஜ : மன்னருக்கு என்ன பதிலைத்தான் சொல்லப் போகிறாய்?

கமுனு : அன்று எழுதினவன் அழித்தெழுத மாட்டான் குருஜீ. அதே முடிவுதான். எல்லாளனுக்குட் பட்ட சிற்றரசனாக அல்ல, ஈழத்தின் சக்கரவர்த்தியாகப் பிறந்தவன் இந்தக் கமுனு என்று போய்ச் சொல்லும்.

ராஜ : அதையும்தான் பார்த்துவிடுவோம்.
(போகிறார்)

கமுனு : ஹஹ்...... ஹஹ்ஹஹ்ஹா!

ராஜ : (நின்று திரும்பி) இன்னமும் காலந் தப்பிவிடவில்லை. இனியும் யோசி...... நன்றாக யோசித்துப் பார்.

கமுனு : (ஏளனமாக) தவறு! தவறு!! தங்களுக்காகப் புதிய வார்த்தைகளைச் சேகரித்துக் கொள்கின்றேன்.

[ராஜகுரு ஆவேசத்தோடு போய் மறைகின்றார். கமுனு தீவிர சிந்தனையோடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடமாடுகின்முன். அங்கிருக்கும் சிறிய மேடையிலமர்ந்து முழங்கைகளைக் கால்களிலே பொருத்தித் தலைகுனிந்து நெற்றியைக் கைகளிலே தாங்கிக்கொள்கின்முன்.

சிறிது நேரத்தில் கதவு திறக்கப்படும் ஓசை கேட்டு நிமிர்ந்து பார்க்கின்முன். அவனெதிரே தளபதி வீரசிம்மன் நிற்கின்முன்.

கமுனு : (எழுந்தவாறு) ஓ! தளபதி வீரசிம்மஞ? இப்போதுதானே உங்கள் ராஜ குரு இங்கிருந்து போகிமுர். ஏன் தனித்தனியாக வந்துகொண்டிருக்கிறீர்கள்?

வீரசி : இளவரசே! உங்கள் வீரத்தையும், ஆற்றலையும் நாங்களனைவருமே விரும்புவதால்தான் தனித்தனியாக வந்துகொண்டிருக்கிறேம்.

கமுனு : ஓ!... நல்......ல எண்ணம்தான்.

வீரசி : எங்கள் நாடு உங்கள் வருகைக்காகவே காத்திருக்கிறது. உங்கள் சேவையை எங்கள் அரசர் விரும்புகிமுர். உங்களுக்குச் சகல செளபாக்கியங்களும் கிடைக்கும்போது நீங்கள் ஏன் தயங்குகின்றீர்கள்? இளவரசே! காத்திருக்கின்றன பொன், பொருள், புகழ் எல்லாம். பெரிய மாளிகை அங்கே கிடைக்கவல்ல மதுரபோகம்!

கமுனு : வீரசிம்மரே! (ஏளனமாக) எனக்கு நன்மை செய்வதில் உங்களுக்குத்தான் எவ்வளவு அக்கறை...... அப்பப்பா!... சிறைக்குள்ளே பிடித்து வைத்துக்கொண்டு 'இதோ பிடி வேண்டியதை எல்லாம் தருகிறேம்' என்று நிர்ப்பந்தப்படுத்

தும், இலக்கணம் கூற முடியாத மகா மகா மகா பெரிய அன்பை இங்கேதான் காண்கிறேன்.

வீர : இளவரசே!

கமுனு : வீரசிம்மா! விதையைத் தலைகுப்புற நட்டாலும் அது பூமிக்கு மேலேதான் தன் தளிரை விடும்.

வீர : கமுனு! நீங்கள் எங்களுடன் சேர வேண்டும் என்பதுதான் எங்கள் வேந்தரின் விருப்பம்!

கமுனு : விசாலமான மனம்தான்......

வீர : எவருமே வெற்றிகொள்ளமுடியாத எங்கள் வேந்தருடன் நீங்களும் சேர்ந்துவிட்டால்..... பிறகென்ன? முழு ஈழத்தையுமே ஆட்டிப் படைக்கலாமே!

கமுனு : நான் என் மக்களை ஆட்டிப்படைக்கப் பிறந்தவனல்ல!

வீர : (எகத்தாளமாக) ஆமாம்! மக்கள் 'நல்லவன், என்றுதான் கொண்டாடுகிறார்கள்.

கமுனு : (சினத்துடன்) அந்த 'நல்ல' கைங்கரியத்தைச் செய்தவர்கள் எல்லாளனும் நீங்களும்தானே...

வீர : ஹ ஹ ஹா !

கமுனு : ஆனால்...... ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள்... சரித்திரம் என்னைப்பற்றி எழுதிவைக்கும்.

வீர : நிச்சயமாக...... 'இனத்துரோகி' என்று.

கமுனு : வீரசிம்மா! என் ஆத்திரத்தைக் கிளறாதே!

வீர : உண்மை சுடுகின்றதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமுனு : ஏது உண்மை?

விவசாய வளர்ச்சிக்காக, குளங்களைக் கட்டுவதற்காக என் கஜானுவைத் திறந்துவிட்டேனே அது தவரு?

சைவ சமயம் வளரத் தலங்களையெல்லாம் புதுப்பித்தேனே அது பொய்யா?

டகோபாக்களையும், கோபுரங்களையும் கட்டுவித்தேனே அது குற்றமா?

ஏன்? பௌத்தர்களிடையே இந்து வழிபாட்டை உண்டாக்கினேனே! மறுக்கமுடியுமா?

ஏ! வீரசிம்மா! தென்னிலங்கையில் புனிதம் காக்கும் கதிர்காமத்தில் முருகனுக்குக் கோவிலெடுத்தது யார்? சொல்! யார்?

உன் எல்லாளனு?

கமுனு! இந்தக் கமுனுதான்!

என்னையா இனத்துரோகி என்கிருய்?

ஹா! அடிவருடித் துரோகிகளே!......

வீர : கமுனு!

கமுனு : நீ இந்த நாட்டில் பிறந்தவன்தானே? உன் உடலில் ஒரு பேடியின் இரத்தமா ஓடுகிறது?

வீர : வாயை அடக்கிப் பேசு. எல்லாளரின் விருப்பத்துக்குச் சம்மதிக்கப் போகிருயா இல்லையா?

கமுனு : விருப்பம்...... சம்மதம்...... எல்லாளனுக்கு.... இந்தக் கமுனுவிடமிருந்து.... ஹஹ்ஹஹ்ஹா!

வீர : உன் பிதற்றலைக் கேட்க நான் தயாராயில்லை.

கமுனு : ஓ! (அமைதியாக) என் வாள் என்றுமே நல்லூர், மாதோட்ட ராஜதானிகளுக்கு எதிராக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுந்ததில்லை என்று எல்லாளனிடம் சொல்!

வீர : உன் பதில்......?

[கமுனு அமைதியாக வீரசிம்மனை நெருங்கி வருகின்றான். எதிர்பாராத விதமாகச் சடாரென வீரசிம்மனின் இடையிலுள்ள வாளை உருவி எடுக்கிறான். அதை அவனிடமே நீட்டி]

கமுனு : இதோ! இதை எல்லாளனிடம் கொண்டு போய்க் கொடு. இதை எடுத்துக்கொண்டு என்னிடம் வரச் சொல்... துணிவிருந்தால்!

வீர : கமுனு! அளவு மீறுகிறாய்.

[வீரசிம்மன் வாளைப் பிடுங்கிக்கொள்கின்றான். ஆத்திரத்தோடு சிறையைவிட்டு வெளியேறுகின்றான். காவலாளிகள் மீண்டும் கதவுகளைப் பூட்டுகின்றனர்.

கமுனு சிறைச்சுவர்களைச்சுற்றி ஆக்ரோசத்தோடு நோட்டம் விடுகின்றான். அங்குமிங்கும் நடக்கின்றான். அண்ணார்ந்து மேலே பார்க்கின்றான். வாய் முணு முணுக்கிறது ]

கமுனு : (முணுமுணுப்பு) ம்! சிறைச்சாலை......? இது வீரனை விவேகியாக்கும்.

[நடக்கிறான். கீழே கிடக்கும் ஒரு சங்கிலி கால்களில் இடறுகிறது. அதை ஆத்திரத்தோடு உதைத்து, உதறி எறிகிறான். அது கதவின் இரும்புக் கம்பிகளில் மோதிப் பெருத்த ஓசையை உண்டாக்குகிறது. அந்த இரும்போசை தணியுமுன்னம் சிரிப்போசை கேட்கிறது. கமுனு திரும்பிப் பார்க்கிறான்; கதவுக்கு வெளியே கம்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கூடாக வீசி வந்த சங்கிலியின் நுனியைப் பற்றியபடி ராஜரதாவின் வேந்தன் எல்லாளன் நிற்கிறான்.

எல்லாளன்: கமுனு! அது வாயில்லாத இரும்பப்பா.

கமுனு: ஓ!... உங்கள் கொலுமண்டபத்து சிற்றரசர்களை நினைத்துத்தான் இப்படிச் சொல்கிறீர்கள் போலிருக்கிறது. ஆனால், நானிருக்குமிடத்தில் இரும்புகூட சுதந்திரகீதம் பாடும். இந்தச் சங்கிலி கணீரிட்டது அதனால்தான்.

எல்லாளன்: கமுனு! உன் அறிவையும் ஆற்றலையும் பாராட்டுகிறேன். ஆனால் நீ நினைப்பதைப் போல் சிற்றரசர்களென்றால் ஏவலாளர்களல்லர்.

கமுனு: அப்படியா? — 'வா' என்றால் வந்து, போ என்றால் சென்று, படை திரட்டு என்றால் செய்து, போரிடு என்றால் சிரமேற்கொண்டு கட்டளைகளுக்கடிபணிபவர்கள் ஏவலாளர்களில்லை என்றால் அது ஆச்சரியம்தான்...

எல்லாளன்: என்னுடைய கொலுமண்டபத்தில் குறுநில மன்னர்கள் குற்றேவல் செய்பவரல்ல கமுனு.

கமுனு: தன் நாட்டு மக்களை வதைத்து, வரி வசூலித்து கப்பம் கட்டி வாழ்பவர்களுக்குப் பெயர் மன்னர்கள்தானா?

எல்லாளன்: எல்லாளன் தர்பாரில் ஈழத்துச் சிற்றரசர்கள் வீற்றிருப்பதே அவர்களின் பெருமைக்குச் சான்றுதான்.

கமுனு: அப்படியான வீற்றிருப்பும், பெருமையும் எனக்குத் தேவையில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாளன்: கமுனு, என் குடை நிழலில் வீற்றிருப்பதால் நீயும் என் சாம்ராஜ்யத்தின் ஒரு வைரமணி யாக மாறுகிறாய்...

கமுனு : ரொகுனு நாட்டின் வைரத்தை நான் ஏன் இன்னொருவன் மகுடத்தில் பதிக்க வேண்டும்?

எல்லாளன்: (கோபத்துடன்) நீ வீரனென்ற ஒரே காரணத்துக்காகத்தான் உன் வார்த்தைகளுக்கு மதிப்பளித்துக் கொண்டிருக்கிறேன்.

கமுனு : நீங்களும் ஒரு வீரர் என்ற எண்ணத்திற்தான் நானும் உங்கள் அரச சபைக்கு வந்தேன். ஆனால் இப்படிச் சிறை வைப்பீர்களென நினைக்கவே இல்லை.

எல்லாளன்: கமுனு, சிறையிலேயே கிடப்பதுதான் உன் விருப்பமா?

கமுனு : சொர்க்கத்திலே அடிமையாயிருப்பதைவிட நரகத்தில் மன்னனாயிருப்பதுதான் என் லட்சியம்.

எல்லாளன்: (பொறுமையிழந்து) கடைசித் தடவையாகக் கேட்கிறேன்.

கமுனு : கடைசித் தடவையாக மட்டுமல்ல, கல்பகோடி காலங்களாகக் கேட்டாலும் என்னிடமிருந்து ஒரே பதில்தான் கிடைக்கும்.

எல்லாளன்: கமுனு! நன்றாகச் சிந்தித்துப்பார். எனக்குப் பட்ட அரச மண்டலமே உன் சேவையை எதிர் பார்க்கிறது. அதை நீ இழப்பது புத்திசாலித் தனமல்ல.

கமுனு : ரொகுனுநாடும் என் பணியைத்தான் எதிர் பார்க்கிறது. அதுமாத்திரமல்ல என் அன்னை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூமியான மலையரதாவும் என் பின்னால் வரத் தயாராயிருப்பதை நீங்களறிய வேண்டும்.

எல்லாளன்: சிறுபிள்ளைத்தனமாகப் பேசாதே கமுனு. உன் துடிப்புக்கும், வீரத்துக்கும் தகுந்த இடம் எல்லாளனின் சாம்ராஜ்யம்தான். உனக்கு என்னென்ன பட்டங்கள் வேண்டும், என்னென்ன விருதுகள் வேண்டும்? கேள். அத்தனையும் தருகிறேன்.

கமுனு: (ஏளனமாக) துஷ்ட கமுனு என்ற ஒரு பட்டத்தைச் சூட்டிவிட்டீர்களே அது போதாதா என்ன? இன்று மக்களின் கண்களுக்கும் நான் துஷ்டனாகத்தான் தென்படுகிறேன்.

எல்லாளன்: அந்த அவப்பெயரை நாளையே என்னால் மாற்றிவிட முடியும். — எங்களை எதிர்ப்பதனால் இது மட்டுமா நடக்கும்......?

கமுனு: அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. ஆனால் என்னை ஒரு இனத்துவேசம் கொண்டவனாகவும் கதை கட்டிவிட்டீர்களே அதைத்தான் என்னால் தாள முடியவில்லை. இந்த அரசியல் சாணக்கியத்தால் தமிழர்களை எனக்கெதிராகக் கிளப்பி விடலாம் என்று கனவு காண்பீர்களானால்...... உங்களுக்கு என் ஆழ்ந்த அனுதாபங்கள்.

எல்லாளன்: கமுனு!

கமுனு: எல்லாளரே! உங்கள் சுயநலத்துக்காக — அரசியல் மோசடிகளுக்காக — ஆட்சிபீடத்தைப் பற்றிக்கொள்வதற்காக என் பெயரை நீங்கள் பயன்படுத்தலாம் ஆனால் அது நீண்ட நாட்களுக்கு முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாளன்: ஹஹ் ஹஹ்... ஹா!

கமுனு: சிம்மாசனத்தின் மீதுள்ள வெறியினுல் சிங்களவரையும், 'தமிழரையும் மோதவிடுகிறீர்கள். ஆனுல் அவர்கள் என் பிரஜைகள். ஆளும் மமதைக்காக அவர்களைப் பயன்படுத்துவதை நான் அனுமதிக்க முடியாது.

எல்லாளன்: அனுமதி...? அனுமதி...? ஹஹ் ஹா! கமுனு! வடக்கே எல்லாளனும், தெற்கே கடலும் நெருக்கும்போது எப்படித் தாராளமாகப் படுப்பது எனக்கேட்டாயாமே...... நீயா இன ஒற்றுமைபற்றிப் பேசுகிருய்?

கமுனு: நிச்சயமாக நான்தான் பேசமுடியும். என்னை மாத்திரமல்ல இந்தப் பூமியின் இரு இனங்களையுமே நீ உன் வசதிகளால் — உன் ஆற்றலால் - உன் கொள்கையால் நெருக்குவதைப்பற்றி நான் ஒருவனே பேசமுடியும்...! ஆனுல் ஒன்று சொல்கிறேன், உன் கொள்கையை, உன் ஆட்சியை மட்டுமே எதிர்ப்பேன்; எங்கள் சகோதரத் தமிழர்களையல்ல.

எல்லாளன்: பாவம்! என் ஆட்சி இந்தச் சிறைகூடத்துக்குள்ளே நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லையே.

கமுனு: (ஏகத்தாளமாக) நல்லகாலம் தப்பிவிட்டாய்.

(ராஜகுரு வந்து சேர்கின்ருர்)

ராஜகுரு: மன்னவா! இன்னமும் என்ன பேச்சு வேண்டிக்கிடக்கிறது அவனேடு...?

கமுனு: ஓ... ஹ்ஹொஹ்... ஹோ! (எக்காளச்சிரிப்பு)

ராஜகுரு: உன்னேடு பேசுவது யார் தெரியுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமுனு : கமுனுவோடு பேசும்போது அதையுமா மறந்து விடுகிறீர்கள்... பாவம்.

எல்லாளன்: நாவை அடக்கு. உன்னை என் தர்பாருக்குக் கட்டி இழுத்து வந்திருக்கவேண்டும்.

கமுனு : ஆண்டவன்கூட வீரனைச் சந்திக்கச் சிறிது இறங்கித்தான் வந்திருக்கிறான். கேள்விப்படவில்லையா?

எல்லாளன்: யார் வருகிறார்கள் என்பதைப் பார்த்து விடுகிறேன்.

(எல்லாளனும் ராஜகுருவும் படிகளில் ஏறிப்போகிறார்கள்.)

கமுனு : (சிரிக்கிறான்)

[கமுனு சிந்தனையோடு அங்குமிங்கும் நடக்கிறான். அங்கே குவிக்கப்பட்டிருக்கும் வைக்கோல்மீது அமருகின்றான். அப்படியே அதிற் சாய்ந்தவாறு கண்களை மூடுகின்றான். இருட்டிக்கொண்டுவருகிகிறது.

சிறிது நேரத்தில் சிறைச்சாலைக் கதவு திறக்கப்படும் ஓசை கேட்டுத் திடுக்கிட்டுப் பார்க்கின்றான். பெரிய மீசையும், தலைப்பாகையுடனும் ஒரு வீரன் கையில் ஈட்டி கொண்டு உள்ளே நுழைகின்றான். அவன் கமுனுவை அழைக்கின்றான்.]

வீரன் : (பதற்றத்துடன்) இளவரசே எழுந்திருங்கள்.

[கமுனு இருந்தபடியே அவனை நிமிர்ந்து பார்க்கிறான். அவனின் பார்வையிலும், குரலிலும், செயலிலும் ஒருவித அவசர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மும், பதற்றமும் இருப்பதைக் காண்கிறான்.

வீரன் : இளவரசே! தாங்கள் இங்கிருந்து தப்ப வேண்டும்.

(இதைச் சிறிதும் எதிர்பாராத கமுனு சடாரென எழுந்து நிற்கின்றான்.)

கமுனு : என்னது?

வீரன் : உண்மையைத்தான் சொல்கிறேன். புறப்படுங்கள்.

கமுனு : காவலாளிகள்...?

வீரன் : இதோ இந்த முத்திரைக் கணையாழி அவர்களை வெளியே அனுப்பிவிட்டது.

கமுனு : (நெருங்கி வந்து) யார் நீ?

வீரன் : கட்டாயம் தெரிந்துக் கொள்ளத்தான் வேண்டுமா?

கமுனு : நிச்சயமாக. ஆற்றலுள்ள வீரர்களின் உணர்வுகள் என் இரத்தமெலாம் ஓடுவதால் நான் தெரிந்துக் கொள்ளத்தான் வேண்டும்.

வீரன் : (கமுனுவின் பிரகாசமான கண்களையே பார்த்துக் கொண்டிருந்துவிட்டு) — என்னைத் தாங்கள் தெரிந்துக் கொள்வதுமட்டுமல்ல, புரிந்து கொள்ளவும் வேண்டும் என்றுதான் நானும் விரும்புகின்றேன்.

கமுனு : வீரனே! உன்னைப்போன்ற துணிச்சலுள்ள ஒருவனைப் புரிந்துக்கொள்வதைவிட எனக்கு வேறென்ன துணை வேண்டும்?

வீரன் : ஆனால்......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமுனு : என்ன?......

வீரன் : தாங்கள் நினைப்பதைப்போல......... நான் ஒரு வீரனல்ல.

கமுனு : ஓ... கோ... ஹோ! அதைச் சொல்கிறாயா?...... ஒரு வீரன் அப்படிச் சொல்வதொன்றும் தற்பெருமையாகி விடாது; ஒரு வீரனின் தனித்துவமே அதுதான்.

வீரன் : நான் சொல்ல வந்தது...

கமுனு : தம்பி வீரம்தான் நம்மை ஆள்கின்றது. இங்கே பார், நாம் என்றுமே நம்மைப்பற்றிக் குறைவாக எண்ணக்கூடாது. இல்லாவிட்டால் நம் வீரமே நம்மைச் சிதைத்துவிடும்.

வீரன் : இளவரசே! நான் ஒரு பெண்.

கமுனு : என்னது?

[கமுனு திகைத்துத் திக்குமுக்காடிப் போகிறான். அந்த உருவத்தைத் தலை முதல் பாதம்வரை நோட்டம் விடுகின்றான். அவளோ தன் தலைப்பாகையையும், மீசையையும் கழற்றுகிறாள்.]

கமுனு : (திகைப்புடன்) நீ...நீ...

அவள் : என் பெயர் சித்ரவல்லி. தளபதி வீரசிம்மரின் மகள்.

கமுனு : என்...ன!

சித்ரா : நம்பவில்லையா?

கமுனு : எதை நம்புவது, எதை நம்பாமல் விடுவது என்றுதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்ரா : இளவரசே! ராஜவிசுவாசமுள்ள வீரர்கள் இந்த நாட்டில் நிறையப்பேர் இருக்கிறார்கள் என்பதை உங்களால் நம்பமுடியுமானால் என்னையும் நம்பலாம்.

கமுனு : நம்புகிறேன். ஆனால் தளபதியின் புதல்வி என்னைத் தப்புவிப்பதைத்தான்......?

சித்ரா : தங்களின் வீரத்தைப்பற்றிக் கேள்விப்பட்டேன். தங்கள் துணிச்சலைத் தர்பாரில் நேரிலேயே கண்டேன். அவற்றை விரும்பினேன். அதனால்...

கமுனு : நானுங்களின் எதிரியல்லவா?

சித்ரா : ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?

கமுனு : எல்லாளன் என் எதிரி என்றால், அவன் தளபதியின் மகள்.... ?

சித்ரா : இல்லை இளவரசே. என் தந்தை தளபதி மட்டுமல்ல, ஒரு சிற்றரசரும் கூட. இந் நாட்டின் பரம்பரையான பிரஜை. ராஜரதாவின் ராஜ வம்சத்தவர் அவர். ராஜரதாவின் அசர வம்சத்தவள் ரொகுனுரதாவின் மன்னனுக்கு எதிரியாக முடியுமா...?

கமுனு : நீ சொல்வது?

சித்ரா : ஒரு கண் மற்றக் கண்ணைப் பகைக்கமுடியாது என்கிறேன். நாம் ஈழத்தின் மக்கள் என்கின்றேன்.

கமுனு : புரிகிறது சித்ரா; நன்றாகப் புரிகிறது; ஆனால், இத்தனை உணர்ச்சிமிக்க ராஜரதா ஏன் விடுதலைப் பரணி பாடவில்லை?

சித்ரா : தகுந்த வீரனைப் பெறாததால்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமுனு : உன் தந்தைக்கு இது தெரியுமா சித்ரா?

சித்ரா : தெரியாது.

கமுனு : அப்படியானல்......

சித்ரா : உங்கள் வீரத்தை - உங்கள் விடுதலையுணர்வை - உங்கள் ஆற்றலைச் சித்ரவல்லி நேசிக்கிருள்.

கமுனு : நன்றி! சித்ரா நன்றி! உனக்கு ஈழமண்டலமே கடமைப்பட்டிருக்கிறது.

சித்ரா : அந்தக் கடப்பாட்டை நான் எதிர்பார்க்கவில்லை.

கமுனு : அதனிலும் பெரிதாக என்னவேண்டுமோ?

சித்ரா : தப்பிப் போகும் தங்களுடன் நானும் வர வேண்டும்.

கமுனு : (திகைத்து) என்ன? ...என்ன சொல்கிருய் சித்ரா?

சித்ரா : புரியவில்லையா தங்களுக்கு?

கமுனு : சித்ரா!

சித்ரா : உங்களுடன் வரவேண்டும் என்கிறேன்.

கமுனு : நீ சொல்வது......

சித்ரா : இதைவிட விளக்கமாக எப்படித்தான் சொல்லச் சொல்கிறீர்கள்?... சிறையில் ரோஜா மலரக்கூடாதா என்ன?

[சித்ரவல்லி தன்னைக் காதலிக்கிருள் என்பதைக் கமுனு தெளிவாகப் புரிந்து கொள்கிருன்.]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமுனு : சித்ரா! நான் இங்கு வந்தது நாட்டின் விடுதலைக்காகத்தான்.

சித்ரா : இல்லை என்று சொல்லவில்லை. ஒளியைத் தர வரும் நிலவு மலரைப் பார்க்காமற் போவதில்லையே.

கமுனு : நீயோ தமிழ்ப் பெண்.

சித்ரா : நான் விருப்பியது ஒரு இளவரசனைத்தான். என்னைப்போன்ற அரச வம்சத்து மாவீரனைத் தான்.

கமுனு : நாமிருக்கும் நிலையை யோசித்தால்......

சித்ரா : தடைகளைக் காட்டி என்னை ஏமாற்றிவிடாதீர்கள்!

கமுனு : என்னைத் தப்புவிப்பதற்குக் கைம்மாறு?

சித்ரா : ஐயோ! அப்படிமாத்திரம் எண்ணிவிடாதீர்கள். காதல் கைமாறாகப் பெறமுடியாதது என்பது எனக்குத் தெரியும்.

கமுனு : மானைச் சூழ்ந்த ஓநாய்களாக நாட்டைச் சுற்றி எத்தனையோ பேர். இந்நிலையில் நம் கடமை...?

சித்ரா : போர்க்களத்திலும் தங்களின் வெற்றிக்காக உழைக்கக் காத்திருக்கிறேனே.

கமுனு : சித்ரா! நான் இப்போ தப்பிப் போகப்போவது ராஜபாட்டையல்லவே சித்ரா.

சித்ரா : என் காதலும் அப்படித்தானே இளவரசே. ஒரு தமிழ்ப்பெண் ஒருவனை மட்டுமே நினைந்து வாழப் பிறந்தவள் என்பதை மறவாதீர்கள்.

கமுனு : சித்ரா! என் இதயத்தில் உனக்காகத் தனியிடம் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்ரா : நான் தமிழச்சி என்பதற்காகத் தயங்குகின்றீர்களா?

கமுனு : சித்ரா! ஏன் இப்படிப் பேசுகிருய்? என் உடல் சிங்கள உடலாக இருக்கலாம். ஆனல், அதில் ஓடும் ரத்தம் பரம்பரையாக வந்த தமிழ் ரத்தம் என்பதை மறுக்க முடியாதே சித்ரா; சித்ரா நீ ஒரு தமிழச்சியாக இருப்பதனுலல்ல 'நிர்மலமான பெண்' என்பதனுலேயே உன்னை நேசிக்கிறேன்.

சித்ரா : என்னை விட்டுவிட்டுத்தான் போகப் போகிறீர்களா?

கமுனு : உன்னை என் இதயத்திலேயே கொண்டுபோகத் தானே போகிறேன்.

சித்ரா : (பெருமூச்சுடன்) எப்போது வருவீர்கள் என்னைக் கூட்டிப்போக?

கமு : இனி என் கால்கள் உன்னைக் காணுமட்டும் உறங்காது சித்ரா.

சித்ரா : புறப்படுங்கள்...... யாரும் வந்துவிட்டாலும்.

[கமுனு ஆயத்தமாகிருன். அந்தப்பிரிவை எண்ணி மீண்டும் கேட்கிருள்]

சித்ரா : என்னைக் கூட்டிப் போங்களேன்.

கமு : கலங்காதே சித்ரா. என் படைகளுடன் வந்து உன்னை அழைத்துக்கொண்டதன் பின்தான் எல்லாளனுடன் போர் தொடுப்பேன்.

சித்ரா : நிச்சயமாக?

கமு : சத்தியமாக.

[மௌனம். கமுனு புறப்பட்டுவிட்டான்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்ரா : இதோ இந்த முத்திரைக் கணையாழியை வைத்துக் கொள்ளுங்கள். ஆபத்தில் உதவும். ...ஜாக்கிரதையாகப் போய்வாருங்கள்.

கமுனு : நான் வருகிறேன் சித்ரா.

சித்ரா : தங்கள் வெற்றிக்காக வேண்டுகிறேன். இளவரசே! கடைசியாக ஒன்று...... தாங்கள் தமிழர்களை எதிரிகளாகப் பாவித்து நடப்பதாக அரண்மனையிற் சொல்வதெல்லாம்...?

கமுனு : சிங்கத்தைச் சிங்கம் எதிர்ப்பதில்லைச் சித்ரா. சித்ரா! ஈழத்தின் இரு கண்களான தமிழரையும் சிங்களவரையும் நான் என்றுமே பேதப்படுத்தியதில்லை; பேதப்படுத்தவும் மாட்டேன். இது சத்தியம். தன்னுடைய அரசியற் சாகசங்களுக்காக எல்லாளன் என் பெயரை இப்படியெல்லாம் பயன்படுத்துகிறான். அதற்கு வெகு விரைவில் முடிவு காணத்தான் போகின்றேன். ராஜரதாவை அதன் வீரனொருவன் ஆள்வதை நான் வரவேற்கின்றேன். ஆனால், அந்நியன் இந் நாட்டை ஆளமுற்படுவானானால் என் வாள் என்றும் அவன் மார்பை எதிர்த்து நிற்கும். சித்ரா! நீ என்னைச் சந்தேகிக்கத் தேவையே இல்லை. நீ என்மீதுகொண்ட புனிதமான காதலின்மீது ஆணையாகவும், ரொகுஹுரதாவின் கதிர்காமத்தில் கோவில்கொண்ட என் குல தெய்வமான முருகன்மீது ஆணையாகவும் சொல்கிறேன்; சிங்களவர்க்கும், தமிழர்க்கும் பொதுவான மன்னனாக வாழ்வதையே பெரும் பேறாகக் கருதுவேன்.

சித்ரா : நான் பாக்கியசாலி. (கண்களில் ஆனந்தக் கண்ணீர் சொரிகிறது. கமுனு அந்தக் கண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணீரைத் துடைக்கிறுன். யாரேனும் வந்துவிடு வார்கள்; சீக்கிரம் புறப்படுங்கள்.)

கமுனு : வருகிறேன். நாட்டையும் உன்னையும் அடைவ தற்காக ஓடோடி வருவேன் சித்ரா.

சித்ரா : அந்த நந்நாளுக்காகக் காத்திருப்பேன் மாவீர.

[கமுனு விரைந்து போகிறுன். அவன் போய்மறைவதையே சித்ரவல்லி பார்த்த வண்ணம் நிற்கிருள். போர்வீரனின் உடையும் கலைந்த தலையுமாக நிற்கிருள் அவள். அந்தப்புரம் செல்வதற்காகத் திரும்புகிருள். அந்நேரம் காவலாளிகள் வந்துவிடுகின்றனர். அவளால் எதுவுமே செய்ய முடியவில்லை. காவலாளிகள் ஓடி வந்து அவளைப் பிடித்துக்கொள்கின் றனர்.]

1-ம் வீரன் : யார் நீ?

[அவள் பேசாது நிற்கிருள்.]

2-ம் வீரன் ; ஏய்! யார் நீ?

[அவள் திறந்துகிடக்கும் சிறைக் கதவு களைத் திரும்பிப் பார்த்துவிட்டுச் சிரிக் கிருள்.]

[சிரிப்பில் வீரர்கள் ஆத்திரமடைகின் றனர்.]

2-ம் வீரன் ; பேசு. யார் நீ?

சித்ரா : (இனித் தப்பமுடியாதெனத் தெரிந்துகொண்டு) நான்தானே...? நான்... கமுனுவின் காதலி!

1-ம் வீரன் : சீ! (என்றவாறு கன்னத்திலறைகிறுன்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்ரா : தூ! (எனக் காறித் துப்புகிறுள்.]

[வீரசிம்மர் வந்து சேர்கிறுர்.]

வீரசிம்மர் : நீ செய்துவிட்ட பயங்கரமான குற்றத்துக்காக உன்னைக் கைது செய்கிறேம்.

[சித்ரவல்லியின் கரங்களில் விலங்கிடப்பட்டு அழைத்துச் செல்கிறுர்கள். அவள் சிரித்த முகத்துடன் போகிறுள்.]

தமிழ் வீராங்கனை சித்ரவல்லி
காதலித்திருக்காவிட்டால்
சிங்கள மாவீரன் கமுனுவின் பெயர்
சரித்திரத்தில் இடம்பெற்றிருக்குமா?

முற்றும்,

1975



310433

சக்தி அச்சகம், தண்ணீரூற்று, முள்ளியவளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ශ්‍රී ලංකා විශ්ව විද්‍යාලය
පුස්තකාලය
1975 ජූලි - 3
පේරාදෙණිය

310433

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ශ්‍රී ලංකා විශ්ව විද්‍යාලය
පුස්තකාලය
1975 ජූලි - 3
පේරාදෙණිය.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது
அடுத்த
வெளியீடுகள்

மு. கனகராசன்
எழுதிய

## சிலுவையும் குத்துவாளும்
(பரிசு பெற்ற நாடகம்)

## கற்பின் காவு
(பரிசு பெற்ற குறுநாவல்)

மதுர நிலையம்,
ஆஸ்பத்திரி ஒழுங்கை,
மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Cover Printed at the Co-operative Press Ltd. Jaffna. 105-70